பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

*12 01 2026 MONDAY 12 40 PM*

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடியும், ஜெர்மன் பிரதமர் திரு. *Friedrich Mers*-ம் அஹமதாபாதில் இன்று இருதரப்பு ஒத்துழைப்புக்கான பேச்சுவார்த்தை நடத்தினர்.

2. சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள், தேசிய இளையோர் தினமாக கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

3. நாட்டில் மீன் உற்பத்தி கடந்த *11* ஆண்டுகளில் இருமடங்காக அதிகரித்துள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

4. ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து விண்ணில் செலுத்தப்பட்ட *PSLV-C62* ராக்கெட் பாதை மாறிச் சென்றதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

5. ஆக்லாந்து ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின *Yuki Bhambri* - ஸ்வீடனின் *Andre Goransson* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<<<

குஜராத்தில் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடியும், ஜெர்மன் பிரதமர் திரு. *Friedrich Mers*-ம் தற்போது அஹமதாபாதில் இருதரப்பு ஒத்துழைப்புக்கான பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

இந்தியா - ஜெர்மன் உறவுகளில் கடந்த *25* ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விவாதித்த தலைவர்கள், இருதரப்பு வர்த்தகம், முதலீடு, உயர்தொழில்நுட்ப பயன்பாடு, பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு, சுற்றுச் சூழலை பாதிக்காத வகையிலான நீடித்த பொருளாதார வளர்ச்சி, அறிவியல் ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்தும் ஆய்வு செய்தனர்.

மண்டல மற்றும் உலகளாவிய அரசியல் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடியும், ஜெர்மன் பிரதமர் திரு. *Friedrich Mers*-ம் இந்த பேச்சுவார்த்தையின் போது விவாதித்தனர்.

முன்னதாக சபர்மதி ஆ ஆசிரமத்திற்கு சென்ற இருதலைவர்களும், தேசப்பிதா காந்தியடிகள் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

பின்னர் சபர்மதி ஆற்றங்கரையில் நடைபெற்ற சர்வதேச பட்டம் விடும் விழாவையும் கண்டுகளித்தனர்.

>>>>>>>><<<<<<<<<

சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் தேசிய இளையோர் தினமாக இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தொலைநோக்குப் பார்வைகொண்ட விவேகானந்தரின் போதனைகளும், மனிதகுலத்திற்கான அவரது சேவைகளும், அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு அடித்தளமாக திகழ்கின்றன என்று கூறியுள்ளார்.

இந்தியாவின் ஆன்மிக ஞானத்தை, உலகளவில் எடுத்துச் சென்றவர் விவேகானந்தர் என்றும் திருமதி திரௌபதி முர்மு புகழாரம் சூட்டியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள பதிவில், சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையும், போதனைகளும். மனிதனின் உள்ளிருக்கும் சக்தியையும், சுயஒழுக்கத்தையும், தன்னலமற்ற சேவையையும் எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சிப் பாதையில் இளைஞர்கள் ஈடுபடுவதற்கான ஊக்கத்தை சுவாமி விவேகானந்தரின் போதனைகள் அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரும் சந்ததியினருக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக திகழ்ந்தவர் சுவாமி விவேகானந்தர் என்றும் திரு. சி.பி. ராதாராகிருஷ்ணன் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நமது இளைஞர்களை ஊக்குவிக்கும் வலிமையான சக்தியாக திகழ்பவர் சுவாமி விவேகானந்தர் என்று கூறியுள்ளார். அவரது ஆளுமைத் திறனும், பணிகளும், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டிற்கு, புதிய உத்வேகத்தை அளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

*மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், நாட்டின் இளைஞர்களை, அறிவாற்றல், தத்துவம், மற்றும் ஆன்மீகத்துடன் இணைத்தவர் விவேகானந்தர் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப்படும் அவரது பிறந்த நாளில், நாட்டு மக்கள் அனைவருக்கும் தமது வாழ்த்துக்களை உரித்தாக்குவதாகவும் திரு. அமித்ஷா கூறியுள்ளார்*

>>>>>>><<<<<<<<

*சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளை ஒட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.*

*இந்நாளையொட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தியா மட்டுமின்றி பல்வேறு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு. சொற்பொழிவுகள் மூலம் இளைய சமுதாயத்தின் உத்வேகத்தை அதிகரிக்கச் செய்த கர்மயோகி சுவாமி விவேகானந்தர் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*நமது கலாச்சாரமும், பாரம்பரியமும் பாதுகாக்கப்படுவதற்கு ஆன்மிகமே ஆதி ஊற்று என்பதை எடுத்துரைத்த சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள், தேசிய இளைஞர்கள் தினமாக கொண்டாடப்படுவதாக அவர் கூறினார்.*

*இந்த நன்னாளில் சுவாமி விவேகானந்தர் நமக்கு அளித்த பொன்மொழிகள் வழி, தேசத்தை வலிமைப்படுத்துவோம் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

>>>>>>><<<<<<<<

*தேசிய இளையோர் தினத்தை ஒட்டி, திருவள்ளூர் சட்டக் கல்லூரி மாணவர்களின் சுதேசி ஓட்டத்தை மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் கொடியசைத்து தொடங்கி வைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - தனசேகரன் 42 செகண்ட்ஸ்)*

>>>>>>><<<<<<<<

*சத்ரபதி சிவாஜியின் தாயார் Jijabai-யின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மரியாதை செலுத்தியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், Rajamaadha Jijabai, சத்ரபதி சிவாஜிக்கு குழந்தைப் பருவத்திலிருந்தே, தைரியம், சுயமரியாதை மற்றும் கலாச்சாரத்தை காப்பது உள்ளிட்ட பல்வேறு மாண்புகளை கற்றுக் கொடுத்தவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.*

*>>>>>>>><<<<<<<<*

*நாட்டில் மீன் உற்பத்தி கடந்த 11 ஆண்டுகளில் இருமடங்காக அதிகரித்துள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*மீன்வள அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த 2013-14ஆம் நிதியாண்டில் 95 லட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தி, 2024-25ஆம் ஆண்டில் 1 கோடியே 98 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இந்த காலகட்டத்தில், கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத்துறை, மீன்வளர்ப்புத்துறை உள்ளிட்டவை அதிக வளர்ச்சி கண்டுள்ளதாகவும், நாட்டின் பொருளாதாரத்தில் இவை முக்கியப் பங்கு வகிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*உலகிலேயே இரண்டாவது பெரிய மீன்உற்பத்தி நாடாக இந்தியா விளங்குகிறது என்றும், உலகின் மொத்த மீன் உற்பத்தியில் 8 சதவீதம் இந்தியாவின் பங்கு உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.*

*மீன்வளத்துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், இதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சம் கூறியுள்ளது.*

*நடப்பு நிதியாண்டில் மீன்வளத்துறையை மேம்படுத்த 32 ஆயிரத்து 723 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும், நீலப்புரட்சி, பிரதமரின் மீன்வளத் திட்டம், பிரதமரின் உள்நாட்டு மீன்வளர்ப்பு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்டவை செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*நடப்பாண்டில் நாட்டின் மீன் உணவு ஏற்றுமதி முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, 62 ஆயிரத்து 408 கோடி ரூபாய் என்ற அளவை எட்டியிருப்பதாகவும் மீன்வள அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*>>>>>>>><<<<<<<<*

ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து விண்ணில் செலுத்தப்பட்ட *PSLV-C62* ராக்கெட் பாதை மாறிச் சென்றதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

இன்று காலை, 10.17க்கு செலுத்தப்பட்ட ராக்கெட், சற்று நேரத்திற்குள் நிர்ணயிக்கப்பட்ட பாதையை விட்டு, விலகிச் சென்றதாக அவர் கூறினார்.

இதற்கான காரணம் குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும், விரைவில் விவரங்களை தெரிவிக்கவுள்ளதாகவும் திரு. நாராயணன் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<<

கரூரில் நிகழ்ந்த கூட்ட நெரிசலில் ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பாக சிபிஐ தொடுத்த வழக்கு விசாரணைக்காக, த.வெ.க. தலைவரும், நடிகருமான திரு. விஜய் இன்று காலை தில்லி சிபிஐ தலைமையகத்தில் ஆஜரானார்.

கடந்த செப்டம்பர் மாதம் 27ஆம் தேதி, கரூரில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தின் போது, ஏற்பட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர், 80க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

>>>>>>><<<<<<<<

ஈரானின் அந்நாட்டு அரசுக்கு எதிரான மக்களின் போராட்டம், 16-வது நாளாக தொடர்கிறது.

அந்நாட்டில் உள்ள அமெரிக்காவைச் சேர்ந்த மனித உரிமை சமூக சேவை அமைப்பு வெளியிட்டுள்ள செய்தியில், இந்த கலவரத்தில் இதுவரை 544 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு இணையதள சேவைகளும், தொலைத்தொடர்பு சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே, ஈரான் நிலைமை குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், ஆர்ப்பாட்டம் நடத்தி வரும் இஸ்லாமிய குடியரசு உள்ளிட்ட அமைப்பினருடன், அந்நாட்டு அரசு அமைதிப் பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நேத்தன்யாஹூ, வெளியிட்டுள்ள செய்தியில், ஈரான் நிமையை தாம் உன்னிப்பாக கண்காணித்து வருவதாக கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<<

***ஆக்லாந்து ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின Yuki Bhambri - ஸ்வீடனின் Andre Goransson இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.***

***இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-2 என்ற செட்கணக்கில் நெர்லாந்தின் Roger – நியூஸிலாந்தின் Ajeet Rai இணையை வென்றது.***

*>>>>>>>><<<<<<<<<*

***மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி இன்று உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.***

***நவிமும்பையில் இப்போட்டி இரவு மணி 7.30 மணிக்கு நடைபெறுகிறது.***

*>>>>>><<<<<<<*